(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் ஒட்டி சென்ற இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானது தான். எனக்கு இருசக்கரவாகனத்தை ஒட்டுவதற்கு ஒட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. என்னுடைய ஒட்டுனர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஒட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கு விபத்து அன்று காப்பீடு சான்று இல்லை என்றால் சரிதான். வாகனம் வைத்திருப்பவர்கள் ஒட்டுனர் உரிமம் மற்றும் காப்பீடு சான்று வைத்திருக்க வேண்டும் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக என் மீது தான் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மீது குற்றச்சாட்டு வனையப்பட்டு நீதிமன்றத்தில் அபராதம் செலுத்திவிட்டேன் என்றால் சரிதான். நான் அபராதம் செலுத்தியபிறகு தான் காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் விபத்து நடந்தவுடன் சம்பந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு விபத்திற்கு யார் சம்பந்தம் என புகார் கொடுக்கவில்லை என்றால் காவல்துறை கண்காணிப்பாளரிடம் கொடுத்துள்ளேன். விபத்து அன்று நான்தான் என் இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக ஒட்டி சென்று வலதுபுறமாக திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதால் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. என் மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இழப்பீடு பெற வேண்டி பின்யோசனை செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.